**செய்தி வெளியீடு எண்: 41** **நாள்: 20.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

திரைத்துறை என்பது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் சங்கமமாகும். இத்துறையில் இசையில் வல்லவர்கள், இயல் வல்லவர்கள், நாட்டியத்தில் வல்லவர்கள் மற்றும் நடிப்பில் வல்லவர்கள் இருக்கின்றனர். வாழ்க்கையின் பிரதிபலிப்பே திரைப்படமாகும். பொழுது போக்காகவும், அதே சமயம் வாழ்க்கையின் திறனாய்வாகவும் திரை உலகம் விளங்குவதால் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் தன்பால் ஈர்க்கின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த திரைப்படத்துறையில் நல்ல கலைஞர்களை உருவாக்குவதற்காக, எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனம், பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பதற்கு தேவையான தொழில்நுட்பங்களையும், திரைப்படம் தொடர்பானவைகளையும் மாணவர்களுக்கு கற்றுத் தருகிறது.

எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தினை, திரைப்படத்துறையில் ஏற்பட்டு வரும் தொழில் நுட்ப மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் மாற்றியமைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

எம்.ஜி.ஆர் அரசு மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உள்ள முன்காண் திரையரங்கு நவீன வசதிகள் ஏதுமற்ற பழமையான திரையரங்காக உள்ளது. மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப திரையீடு செய்ய போதுமான வசதிகள் இத்திரையரங்கத்தில் இல்லை. இதனால் இங்கு பயிலும் மாணவ, மாணவியர்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இதனை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் அமைந்துள்ள முன்காண் திரையரங்கத்தை 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் புனரமைத்திட ஆணையிட்டுள்ளார்கள்.

இந்த முன்காண் திரையரங்கத்தில் ஒளிவீழ்த்திக் கருவிக்கான ஜெனான் லாம்ப் அவுஸ் (Xenon Lamp House) மற்றும் துணை கருவிகள், தடையில்லா மின் வழங்கு கருவி (UPS), வெப்பநிலைக் கட்டுப்படுத்தி (Temperature Controller) பின் சாய்வு வசதி கொண்ட திரையரங்கு நாற்காலிகள் (Push-back Theatre Seats) மற்றும் துணைக் கருவிகள் நிறுவுதல், மையப்படுத்தப்பட்ட காற்றுப்பதனாக்கம் மற்றும் ஒலியியலுக்குரிய குழாய் (Centralized Air conditioning with Acoustical Ducting) மின்சார நிலை நிறுத்தம் (Power Conditioning), மின் முனைவடிவு (Electrical Termination), அதற்குரிய கட்டட அமைப்புகள், திரையரங்கை ஒலியியலுக்குரிய வகையில் வடிவமைத்தல், மின் சேர்மானங்கள் போன்ற பல்வேறு நவீன வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவினால் பதிவு செய்யப்பட்ட முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கிய கருப்பு வெள்ளை பழைய செய்திப்பட சுருள்களை, எந்தவிதமான பாதிப்பும் ஏற்படா வண்ணம் மின்னணு முறையில் (digitalise) பாதுகாத்திட 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் பழைய செய்திப்படச் சுருள்கள் சிறப்புற பாதுகாக்கப்படும்.

இதே போன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும், அவைகளை உடனுக்குடன் அனைத்து தொலைக் காட்சிகளுக்கும் அனுப்புவதற்கென, தமிழ்நாடு திரைப்பட பிரிவிற்கு அதிவிரைவாக இயங்கக் கூடியதும் மற்றும் அதிக அளவு நினைவுத் திறனைக் கொண்டதாகவும் உள்ள Live Back Bag என்ற நேரடி ஒளிபரப்பு கருவியை 18 லட்சம் ரூபாய் செலவில் வாங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளாாகள்.

நாட்டின் விடுதலைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்ட தலைவர்களை நினைவு கூறும் வகையில் அமைக்கப்பட்ட நினைவிடங்களை நன்முறையில் பராமரிப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த வகையில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நினைவு இல்லத்தை புதுப்பிப்பதற்காக 25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் நினைவு இல்லத்தின் நுழைவாயிலில் உள்ள பெயர் பலகை மாற்றுதல், புத்தக அலமாரி அமைத்தல் மற்றும் புதிதாக ஒளிப்பட விளக்கப் பலகைகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, தமிழுக்கும், தமிழகத்திற்கும் பாடுபட்ட அறிஞர்களின் சேவைகளை பாராட்டுவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நினைவுச் சின்னங்களையும் அமைத்து வருகிறது.

அந்த வகையில், தனது கவிதை படைப்புகள் மூலம் தமிழுக்கும், திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகளை தாய் தமிழ்நாட்டோடு இணைவதற்கு பாடுபட்டதன் மூலம் தமிழ்நாட்டிற்கும் சிறந்த பணியாற்றியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். எனவே தமிழுக்கும், தமிழகத்திற்கும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் ஆற்றிய சேவைகளை நினைவு கூறும் வகையில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதனை செயல்படுத்தும் வகையில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் திருவுருவச் சிலை அமைப்பதற்கு 10.80 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 20.1.2013.